# தருமபுரி மாவட்டம்

## காலாண்டுத் தேர்வு - செப்டம்பர் 2024

பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் மதிப்பெண்கள் - 100

விடைக் குறிப்பு

**ஒரு மதிப்பெண் :-**

| | | |
|---|---|---|
| 1 | ஆ | பதுங்குக் குழிப்போர் முறை |
| 2 | ஆ | லத்தின் அமெரிக்கா |
| 3 | ஈ | தி ஹேக் |
| 4 | ஈ | செப்டம்பர் 1949 |
| 5 | அ | 1 சரி |
| 6 | இ | ஆனைமுடி |
| 7 | ஆ | ஆந்திரப்பிரதேசம் |
| 8 | ஈ | கிருஷ்ணா |
| 9 | இ | மகாராஷ்டிரம் |
| 10 | அ | 5846 கி.மீ. |
| 11 | இ | சட்டப்பிரிவு 360 |
| 12 | இ | குடியரசுத் தலைவர் |
| 13 | அ | 65 |
| 14 | ஆ | தலைமை இயக்குநர் |

www.Padasalai.Net

**இரண்டு மதிப்பெண்கள் :-**

| | |
|---|---|
| 15 | **ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?**<br>♦ இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று,<br>♦ பிரான்சின் அதி தீவிரப்பற்று ,<br>♦ ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று. |
| 16 | **பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின்மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?**<br>✶ பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களுக்கும் மரண அடியைக் கொடுத்தது.<br>✶ எடுத்துக்காட்டாக வேளாண் உற்பத்திப் பொருள்களின் விலை பாதியாகக் குறைந்தது. |
| 17 | **பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை ?**<br>♦ உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது,<br>♦ நிதி நிலையை உறுதியானதாக வைத்திருத்தல்,<br>♦ பன்னாட்டு வணிகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது,<br>♦ வேலைவாய்ப்பினைப் பெருக்குவது,<br>♦ நீடித்தப் பொருளாதார வளர்ச்சி,<br>♦ உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது . |

| | |
|---|---|
| 18 | **பாக்தாத் உடன்படிக்கைப் பற்றி அறிந்ததை எழுதுக.**<br>1. துருக்கி, ஈராக், பிரிட்டன், ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் 1955ல் ஏற்படுத்திய ஒப்பந்தமே பாக்தாத் ஒப்பந்தம் ஆகும்.<br>2. அமெரிக்க ஐக்கிய நாடுகள் இவ்வுடன்படிக்கையில் 1958ல் இணைந்ததோடு இவ்வொப்பந்தம் மத்திய உடன்படிக்கை அமைப்பு என அறியப்பட்டது.<br>3. இவ்வொப்பந்தம் 1979ல் கலைக்கப்பட்டது. |
| 19 | **ராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.**<br>1. உயிர்களிடையே நம்பிக்கை, இரக்கம் என்னும் பிணைப்புகள் இருக்க வேண்டும் என்றார்.<br>2. அவர் தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடி கொடிகள் உட் பட அனைத் து உயிரினங்களின் மீதும் காட்டுவது ஜீவகாருண்யம் என்றார்.<br>3. சமரசசுத்த சன்மார்க்க ச த்ய சங்கம் ஏற்படுத்தி 1866ல் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடியப் பஞ்சத்தின்போது அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் நிறுவினார். |
| 20 | **இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப்பற்றி கூறுக**<br>➢ நர்மதை<br>➢ தபதி<br>➢ மாஹி |
| 21 | **வெப்ப குறைவு விகிதம் என்றால் என்ன?**<br>1. புவிபரப்பிருந்து உயரே செல்லச் செல்ல வளிமண்டலத்தின் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் 6.5°c என்ற அளவில் வெப்பநிலை குறையும்.<br>2. இதற்கு வெப்ப குறைவு விகிதம் என்று பெயர் |
| 22 | **இந்தியாவின் வேளாண்மை முறைகளைக் குறிப்பிடுக**<br>1. தன்னிறைவு வேளாண்மை 2. இடப்பெயர்வு வேளாண்மை 3.தீவிர வேளாண்மை<br>4. வறண்ட நில வேளாண்மை 5. கலப்பு வேளாண்மை 6. படிகட்டு முறை வேளாண்மை |
| 23 | **பன்னாட்டு வணிகம்- வரையறு.**<br>♦ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் என அழைக்கப்படுகிறது.<br>♦ ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியன பன்னாட்டு வணிகத்தின் இரு கூறுகள் ஆகும். |
| 24 | **குடியுரிமை என்பதன் பொருள் என்ன?**<br>♦ 'சிட்டிசன்' (Citizen) எனும் சொல் 'சிவிஸ்' (Civis) எனும் இலத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும்.<br>♦ இதன் பொருள் ஒரு 'நகர அரசில் வசிப்பவர்' என்பதாகும். |
| 25 | **உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?**<br>♦ அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்<br>♦ அவர் ஐந்து ஆண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.<br>♦ அவர் பத்து ஆண்டுகள் உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.<br>♦ குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்பு மிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும் |
| 26 | **தனி நபர் வருமானம் என்றால் என்ன?**<br>♦ தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.<br>♦ நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.<br>♦ தலா வருமானம் = நாட்டு வருமானம் / மக்கள் தொகை |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 27 | **பசுமைப் புரட்சியின் விளைவுகள் என்ன?**<br>❖ உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது.<br>❖ உயர் ரக விதைகளான அரிசி மற்றும் கோதுமை போன்ற உணவு தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரித்தது.<br>❖ முக்கிய தானிய பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது. |
| 28 | • பருத்தி இழையிலிருந்து, விதைகளை பிரித்தெடுக்கும் முறைக்கு ஜின்னிங் என்று பெயர். |

**ஐந்து மதிப்பெண்கள் :-**

| | | |
|---|---|---|
| 29 | i | பெர்டினன்ட் லாஸ்ஸல்லி |
| | ii | ஸ்ராட்ஸ்பர்க் |
| | iii | 51 A |
| | iv | 65 |
| | v | ஜனவரி 1, 1995 |

30 **ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக**

* போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்கவேண்டும்.
* மையநாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத் தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.
* ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது.
* சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.
* ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது.
* ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.
* அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.
* போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது.

| | |
|---|---|
| 31 | **ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.**<br>• 1919 ஆம் ஆண்டில், ஏழு நபர்களைக் கொண்ட ஒரு குழுவானது, மியூனிச் நகரில் சந்தித்து தேசிய சோசலிஸ்ட் ஜெர்மன் உழைப்பாளர் கட்சி சுருக்கமாக நாசி (Nazi) கட்சியை நிறுவியது.<br>• ஹிட்லரும் அவர்களுள் ஒருவராக இருந்தார்.<br>• முதல் உலகப்போரின் போது பவேரியாவின் படையில் பணியாற்றினார்.<br>• அவரின் ஆற்றல் மிக்க உரை வீரர்களைத்தட்டி எழுப்பியது.<br>• 1923இல் பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற அவர் முயற்சியை மேற்கொண்டார்.<br>• மியூனிச் நகரில் முன்கூட்டியே திட்டமிடப்படாமல் அவர் மேற்கொண்ட தேசியப்புரட்சி அவரைச் சிறையில் தள்ளியது.<br>• சிறையில் இருந்த போது தனது அரசியல் சிந்தனைகளை உள்ளடக்கிய சுயசரிதை நூலான மெயின்காம்ப் (Mein kampf - எனது போராட்டம்) எனும் நூலை எழுதினார்.<br>• 1932 இல் நடைபெற்ற குடியரசுத்தலைவர் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் 6,000,000 வாக்குகளைப் பெற்றனர். முதலாளிகள், சொத்து உரிமையாளர்கள் நாசிசத்தை ஆதரிக்க தொடங்கினர்.<br>• இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி ஹிட்லர் தவறான வழியில் அதிகாரத்தைக் கைப்பற்றினார். |
| 32 | **19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.**<br>✶ சமூகத்தில் நிலவி வந்த சதி எனும் உடன்கட்டை ஏறுதல்,<br>✶ குழந்தைத் திருமணம் மற்றும் பலதார மணம் போன்ற மரபு சார்ந்த பழக்கவழக்கங்கள்,<br>✶ விதவைப் பெண்கள் மறுமணம் செய்ய உரிமை மறுக்கப்பட்டது,<br>✶ பெண் அடிமைத்தனம், ஆணை விட பெண் கீழானவள் எனும் நடைமுறைகள் வரதட்சணைகள்,<br>✶ பெண் கல்வி மறுப்பு நடைமுறைகள்,<br>✶ எல்லையற்ற உபநிடதங்கள் போதனைகள்,<br>✶ பிராமணர் மேலாதிக்கம் செய்யும் சடங்கு முறைகள்,<br>✶ மூடநம்பிக்கைகள், பழக்கவழக்கங்களின் அதிக தாக்கங்கள்,<br>✶ பயங்கரமான சாதிக் கொடுமைகள், ஒடுக்கப்பட்ட மக்களின் துயரங்கள்,<br>✶ மேலைநாட்டு பகுத்தறிவுச் சிந்தனைகளை ஏற்க மறுத்தது. |
| | |

www.Padasalai.Net

33 அ .வேறுபடுத்துக

i.

**மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்**

| வ.எண் | மேற்குத் தொடர்ச்சி மலைகள் | வ.எண் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|---|
| 1 | தீபகற்ப பீடபூமியின் மேற்கு விளிம்பு பகுதியில் காணப்படுகிறது. | 1 | தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்பு பகுதியில் காணப்படுகிறது. |
| 2 | மேற்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது. | 2 | கிழக்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது. |
| 3 | தொடர்ச்சியான மலைகள். | 3 | தொடர்ச்சியற்ற மலைகள். |

**புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்.**

| வ.எண் | புதுப்பிக்க இயலும் வளங்கள் | வ.எண் | புதுப்பிக்க இயலா வளங்கள் |
|---|---|---|---|
| 1 | பயன்பாட்டிற்கு பிறகு இயற்கை முறையில் மீட்டுருவாக்கம் செய்து கொள்கின்றன. | 1 | பயன்பாட்டிற்கு பிறகு மீண்டும் மீட்டுருவாக்கம் செய்ய இயலா வளங்கள். |
| 2 | சுற்றுச்சூழலை பாதிக்காது | 2 | சுற்றுச்சூழலை பாதிக்கும் |
| 3 | எ.கா: சூரிய சக்தி, காற்று சக்தி | 3 | எ.கா:நிலக்கரி, பெட்ரோலியம், |

ii.

ஆ. காரணம் கூறு.

**வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.**

- வேளாண்மை மூலம் 50 சதவீதத்திற்கும் மேலான மக்களுக்கு வேலைவாய்ப்பையும் நாட்டின் மொத்த வருமானத்தில் 25 சதவீதத்தையும் நாட்டிற்கு அளிக்கின்றது.
- ஆதலால் வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு ஆகும்.

www.Padasalai.Net

34

## தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.

☒ தீபகற்ப ஆறுகளை அவை பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

அவை: 1) கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்

2) மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்

### கிழக்கு நோக்கி பாயும் ஆறுகள்

**அ. மகாநதி**

- இந்நதி சத்தீஸ்கார் மாநிலத்தில் உற்பத்தியாகி ஒடிசா வழியாக வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
- சுமார் 851 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.
- சீநாத், டெலன், சந்தூர் போன்றவை இதன் முக்கிய துணையாறுகளாகும்.

**ஆ. கோதாவரி**

- இந்நதி மகாராஷ்ட்ரா மாநிலத்தில் உற்பத்தியாகி ஆந்திரப்பிரதேசம் வழியாக வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
- சுமார் 1465 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.
- பூர்ணா, பென்கங்கா, பிரனிதா போன்றவை இதன் முக்கிய துணையாறுகளாகும்.

**இ. கிருஷ்ணா**

- இந்நதி மகாராஷ்ட்ரா மாநிலத்தில் உற்பத்தியாகி ஆந்திரப்பிரதேசம் வழியாக வங்காள விரிகுடாவில் கலக்கிறது.
- சுமார் 1400 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.
- கொய்னா, பீமா, முசி போன்றவை இதன் முக்கிய துணையாறுகளாகும்.

**ஈ. காவிரி**

- காவிரி ஆறு கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக்காவிரியில் உற்பத் தமிழ்நாட்டில் பூம்புகார் என்ற இடத்தில் வங்கக்கடலில் கலக்கிறது.
- சுமார் 800 கி.மீ நீளத்துக்கு பாய்கிறது.
- இது தென் இந்தியாவின் கங்கை என்றும் அழைக்கப்படுகிறது.

www.Padasalai.Net

## மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்

### அ. நர்மதை

- இந்நதி மத்தியப்பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் உற்பத்தியாகி காம்பேவளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.
- சுமார் 1312 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.
- பர்னா, பஞ்சர், கோலர் போன்றவை இதன் முக்கிய துணையாறுகளாகும்.

### ஆ. தபதி

- இந்நதி மத்தியப்பிரதேசத்தில் உற்பத்தியாகி காம்பேவளைகுடா வழியாக அரபிக்கடலில் கலக்கிறது.
- சுமார் 724 கி.மீ நீளத்திற்குப் பாய்கிறது.
- வாகி, கோமை, போரி போன்றவை இதன் முக்கிய துணையாறுகளாகும்.

## தென் மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.

- தென்மேற்கு பருவக்காற்று பொதுவாக ஜூன் முதல் வாரத்தில் இந்தியாவின் தென்பகுதியில் தொடங்கி கொங்கணக் கடற்கரை பகுதிக்கு ஜூன் இரண்டாவது வாரத்திலும் ஜூலை 15இல் அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் முன்னேறுகிறது.
- உலகளாவிய காலநிலை நிகழ்வான "எல்நினோ" தென்மேற்கு பருவக்காற்றுக் காலத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வடஇந்தியாவின் வெப்பநிலையானது 46°C வரை உயருகிறது.
- இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் 'பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது.
- தென்மேற்கு பருவக்காற்று இந்தியாவின் தென்முனையை அடையும்பொழுது இரண்டு கிளைகளாகப் பிரிக்கிறது.

1. <u>அரபிக்கடல் கிளை</u>

- தென்மேற்கு பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதி பலத்த மழைப் பொழிவை தருகிறது.
- இக்கிளையானது வடக்கு நோக்கி நகர்ந்து இமயமலையால் தடுக்கப்பட்டு வடஇந்தியா முழுவதும் கனமழையைத் தோற்றுவிக்கிறது.
- ஆரவல்லி மலைத் தொடர் இக்காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் மற்றும் வடஇந்தியாவின் மேற்கு பகுதிக்கு மழைப்பொழிவை தருவதில்லை.

www.Padasalai.Net

| | |
|---|---|
| | <u>2. வங்காள விரிகுடா கிளை</u><br>♦ வங்காள விரிகுடா கிளை, வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது.<br>♦ இது காசி, காரோ, ஜெயந்தியா குன்றுகளால் தடுக்கப்பட்டு மேகாலயாவில் உள்ள மௌசின்ராமில் (mawsynram) மிக கனமழையைத் தருகிறது.<br>♦ இந்தியாவின் ஒட்டு மொத்தமழைப்பொழிவில் 75 சதவீதமழைப்பொழிவானது இப்பருவக்காற்று |
| 36 | **நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?**<br>♦ கிராமப்புற சமுதாயம் நகர்புற சமுதாயமாக மாற்ற மடைவதையே நகரமயமாக்கம் என்கிறோம்.<br>☒ <u>அதன் சிக்கல்கள்</u><br>✶ நகர விரிவாக்கத்தை ஏற்படுத்துகிறது.<br>✶ நகர்புறங்களில் மக்கள் நெருக்கடியை தோற்றுவிக்கிறது.<br>✶ நகர்புறங்களில் குடியிருப்புகளின் பற்றாக்குறையை உருவாக்குகிறது.<br>✶ குடிசைப் பகுதிகள் தோன்ற காரணமாக உள்ளது.<br>✶ போக்குவரத்து நெரிசலை அதிகப்படுத்துகிறது.<br>✶ குடிநீர் பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றது.<br>✶ வடிகால் பிரச்சனைகள் உண்டாகின்றன.<br>✶ திடக்கழிவு மேலாண்மையை சிக்கலாக்கிறது.<br>✶ குற்றங்கள் அதிகரிக்க காரணமாகின்றன. |
| 37 | **இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.**<br>♦ உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.<br>♦ இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.<br>♦ இது நெகிழாத் தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.<br>♦ கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.<br>♦ இந்தியாவைச் சமயச் சார்பற்ற நாடாக்குகிறது.<br>♦ சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.<br>♦ உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது. |

www.Padasalai.Net

| | |
|---|---|
| 38 | முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.<br>☑ **அமைச்சரவை தொடர்பானவை**<br>♦ முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில்ஆளுநர் அமைச்சர்களை நியமிக்கிறார்.<br>♦ அமைச்சர்களுக்குத் துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.<br>♦ தனது அமைச்சரவையை மாற்றியமைக்கிறார்.<br>♦ அமைச்சரவைக் கூட்டத்தைத் தலைமை ஏற்று நடத்தி முடிவுகளை எடுக்கிறார்.<br>♦ அமைச்சர்கள் அனைவரையும் கட்டுப்படுத்தி, வழிநடத்தி, இயக்கி, அவர்களது நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கிறார்.<br>☑ **ஆளுநர் தொடர்பானவை**<br>♦ கீழ்க்காணும் அலுவலர்களின் நியமனங்கள் தொடர்பாக ஆளுநருக்கு ஆலோசனை வழங்குகிறார்.<br>♦ மாநில அரசு வழக்குரைஞர்<br>♦ மாநில தேர்தல் ஆணையர்<br>♦ அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்<br>♦ மாநில திட்டக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்<br>♦ மாநில நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்<br>☑ **சட்டமன்றம் தொடர்பானவை**<br>♦ சட்டமன்ற கூட்டத் தொடரை ஆரம்பிக்கவும் ஒத்திவைக்கவும் ஆளுநருக்கு முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார்.<br>♦ சட்டமன்றத்தில் அரசின் கொள்கைகளை அறிவிக்கிறார்.<br>♦ .சட்டமன்றத்தில் மசோதாக்களை அறிமுகப்படுத்துகிறார். |
| 39 | GDP கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.<br>✶ **செலவின முறை**<br>♦ இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத்தொகையேயாகும்.<br>• $Y = C + I + G + (X - M)$<br>✶ **வருமான முறை**<br>♦ பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தை கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்த முறை கூறுகிறது.<br>♦ வருமான முறையில் GDPஐ கணக்கிடும் போது<br>• வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம். |

**✶ மதிப்பு கூட்டு முறை**

- மதிப்பு கூட்டு முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டினால் இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.
- உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலை பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப்பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.

<u>மதிப்புக் கூட்டு முறை:</u>

- தூள் + பால் + சர்க்கரை = தேனீர்
- இடைநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு.

40 **உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.**

- உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் தானாக கிடைப்பதில்லை.
- வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்.
- உலகமயமாக்கலினால் உலகளாவிய போட்டி அதிகரித்த தொழில்துறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள், வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்கு கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.
- இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.
- உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.
- மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள்.
- இதனால் உடல்நலக் குறைவு மற்றும் நோய்பரவுதலுக்கு இது வழிவகுக்கிறது.
- உலகமயமாக்கல் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

41


**1910**
- 1910 – தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்
- 1912 – முதல் பால்கன் போர்
- 1914 – முதலாம் உலகப் போர் தொடக்கம்
- 1917 – ரஷ்யப் புரட்சி
- 1918 – முதல் உலகப் போர் முடிவு
- 1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

**1920**
- 1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்
- 1922 – முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு
- 1927 – வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
- 1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

**1930**
- 1933 – ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்
- 1934 – நீண்ட பயணம்
- 1935 – முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது
- 1938 – மியூனிச் உடன்படிக்கை
- 1939 – இரண்டாம் உலகப் போர் தொடக்கம்

**1940**
- 1940 – பிரிட்டன் போர்

42




## எட்டு மதிப்பெண்கள் :-

**43.** அ.

### 2. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க ?

- ஐக்கிய நாடுகள் சபை நிறுவப்படுவதற்கான முதல் முயற்சியை அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனும் 1941 இல் அட்லாண்டிக் சாசனத்தின் வழியே வெளியிட்டன.
- ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் 1945 ஆம் ஆண்டு, ஜூன் 26 ஆம் நாள் 51 நாடுகள் கையெழுத்திட்டன.
- தற்போது ஐக்கியநாடுகள் சபை 193 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு நாடும் சிறியதோ அல்லது பெரியதோ, ஐக்கியநாடுகள் சபையில் சமமான வாக்குகளை பெற்றுள்ளது.

## ❖ ஐநாவின் முக்கிய அமைப்புகள்

### ☑ பொதுச்சபை

- ஆண்டுக்கொரு முறை கூடும் இவ்வமைப்பில் நாடுகளின் நலன் சார்ந்த அம்சங்களும் முரண்பாடுகளுக்கான காரணங்களும் விவாதிக்கப்படுகின்றன.

### ☑ பாதுகாப்பு அவை

- பாதுகாப்பு சபையானது 15 உறுப்பினர்களைக்கொண்டுள்ளது.
- அமெரிக்க ஐக்கியநாடுகள், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் இச்சபையின் நிரந்தர உறுப்பினர்களாவர்.

### ☑ நிர்வாக அமைப்பு ( செயலகம் )

- ஐக்கியநாடுகள் சபையின் செயல்பாட்டு அங்கமாகத் திகழ்வது செயலகம்ஆகும்.

### ☑ பன்னாட்டு நீதிமன்றம்

- பன்னாட்டு நீதிமன்றம் ஐக்கியநாடுகள் சபையின் நீதி நிர்வாகக் கிளையாகும்.
- இது நெதர்லாந்திலுள்ள தி ஹேக்கில் அமைந்துள்ளது.

## ❖ ஐநாவின் இதர முக்கியத் துணை அமைப்புகள்

- உணவு மற்றும்வேளாண்மைஅமைப்பு - FAO,
- உலகசுகாதார நிறுவனம் - WHO,
- ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பு - UNESCO

## ❖ ஐநா.வின் செயல்பாடுகள்

- உலகம் எதிர்கொண்ட, மாறிவரும் பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு ஐக்கியநாடுகள் சபை தனது செயல்பாடுகளை விரிவாக்கம் செய்துள்ளது.
- 1960களில் காலனியாதிக்க நீக்கம் முக்கியப் பிரச்சனையாகும்.
- மனித உரிமைகள், அகதிகள் பிரச்சனை, பருவகாலமாற்றம், பாலினச் சமத்துவம் ஆகியன தற்போது ஐக்கியநாடுகள் சபையின் செயல்பாட்டு வளையத்தினுள் உள்ளன.
- மிகச் சிறப்பாகக் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியது ஐநாவின் அமைதிப்படை.
- உலகம் முழுவதிலும் மோதல்கள் அரங்கேறியப் பல்வேறு பகுதிகளில் அப்படை பணி செய்துள்ளது.
- அதன் முக்கியப் பகுதியாக உள்ள இந்திய இராணுவம் உலகின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளது.

www.Padasalai.Net


43.ஆ.

**சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மாசேதுங்கின் பங்களிப்பை அளவிடுக.**


- தென்கிழக்குச் சீனாவில் உள்ள ஹுனான் நகரில் மாசே-துங் பிறந்தார்.
- புரட்சிப்படை ஒன்றை உருவாக்கினார்
- பிறகு அதிலிருந்து விலகி சாங்ஸியாவிலிருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்தார்.
- பின்னர் ஹூனான் நகரை மையமாகக் கொண்டு தனது அரசியல் வாழ்க்கையைத் துவங்கிய அவர் ஒரு முழு பொதுவுடைமைவாதியாக மாறினார்.
- 1934 - ல் நீண்டபயணம், கொரில்லா போர்முறை , ராணுவப்படை போன்றவை மாசேதுங்கிற்கு சிறந்த தலைமை பண்பை பெற்று தந்தது.
- சீனாவில் சச்சரவுகள் முடிவை வந்தடையும் முன்பே செப்டம்பர் 1949இல் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு பீகிங் நகரில் கூடியது.
- பொதுவுடைமைக் கட்சியிலிருந்தும் பிற இடதுசாரி அமைப்புகளில் இருந்தும் 650 பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாடு நடுவண் ஆட்சிக்குழுவைத் தேர்ந்தெடுத்து அதற்கு மாசேதுங்கை தலைவராக நியமித்தது.
- மாசேதுங் 1949 முதல் 1976 வரை சீனாவை ஆட்சி செய்தார்.
- மாசேதுங்கின் (மாவோ) தலைமையில் உருவான சீன மக்கள் குடியரசு ஆட்சியின் செயல்பாடுகள் உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது.
- இன்று உலகில் சீனா பெரும் சக்தியாய் உருவானதற்கு மாசேதுங்கின் அரிய பணியெ காரணமாகும்.

www.Padasalai.Net

44. அ.




44. ஆ.


இந்தியா
N
1. மேற்குத் தொடர்ச்சி மலை
2. சோட்டா நாகபுரி பீடபூமி
பொகாரோ
ஜாம்ஷெட்பூர்
5. ஹிராகுட் அணை
6. மசூலிப்பட்டினம்
4. தென் மேற்கு பருவக்காற்று வீசும் திசை
7. சேலம் இரும்பு எஃகு தொழிலகம்
1. சேலம்
2. பொகாரோ
3. ஜாம்ஷெட்பூர்
3. அகஸ்தியர் மலை உயிர்க்கோளப் பெட்டகம்